**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை.**
**யாழ்ப்பாண மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 பெப்ரவரி 29 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 04 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 28 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணம் ரூபா 111,867,880 கணக்குக்குக் கொண்டுவரப்படாமையால் திரண்டநிதி கணக்குகளில் குறைவாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) தலைமை அலுவலக கட்டடத்தின் பெறுமதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டு கணக்குக்கு கொண்டு வரப்பட்டிருக்காமையினால் கட்டடத்தின் பெறுமதி கணக்குகளில் குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது.

#### 1.3.2 ஆவண சான்றுகள் இன்மை

ரூபா 2,759,211 பெறுமதியான சான்றுகள் இல்லாமையின் காரணமாக 01 கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

---

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 24 ஆம் பிரிவு | பிரதேச சபைகளின் வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக விதிகள் அத்தியாயம் III விதி 32 | சபையினால் ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்படாததுடன் வீதவரி அறவீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபம் 41/90 ஆம் இலக்க 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதி | சபையின் வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு 6 மாதங்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

**2 நிதி மீளாய்வு**

---

**2.1 நிதி விளைவுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 45,356,298 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 13,179,265 இருந்தமை நிதி விளைவு ரூபா 32,177,033 அதிகரித்துள்ளமைக்கு வாடகை, ஏனைய வருமானம் மற்றும் அரச மானிய அதிகரிப்பே காரணமாகும்.

## 2.2 தொழிற்படு மூலதனம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 114,442,725 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 101,872,397 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 12,570,328 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.3 வருமான முகாமைத்துவம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2015 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** |
| இறைகளும் வரிகளும் | 620 | 660 | 5,255 |
| குத்தகை வாடகைகள் | 8,514 | 13,106 | 37 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,906 | 1,890 | 6 |
| ஏனைய வருமானங்கள் | 79,229 | 83,492 | 43,647 |
| **மொத்தம்** | **90,269** | **99,148** | **48,945** |

### 2.3.2 வீதவரிகள்

சபையின் உப அலுவலக ஆதனவரி இடாப்பு 1995 ஆம் ஆண்டில் அழிவடைந்துள்ளதுடன் இற்றைவரை இடாப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆத்துடன் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 குத்தகைகள்

2012 ஆம் ஆண்டிலிருந்து குத்தகை நிலுவை ரூபா 26,892 அறிக்கையிடும் திகதிவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 முத்திரைக் கட்டணங்கள்

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 122,182,624 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டில் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

சபையிலுள்ள உழவு இயந்திரம் பாவிக்க முடியாத நிலையில் உள்ளது.

### 3.2 செயற்திட்டத் தாமதங்கள்

03 வேலைத்திட்டங்கள் ரூபா 1,245,000 பெறுமதியானவை மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்

சபையின் எல்லைக்குள் திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 06 தொடக்கம் ரூபா 3,975,235 வரையான வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்**

-----------------------------------------------------------

சபையினால் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்து முகாமைத்துவம்**

--------------------------------------

**பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

--------------------------------------------------------

சந்தைக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ளது.

**5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------------------------

சபையில் பின்வரும் விடயங்களில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) காசோலை கொடுப்பனவுப் பதிவேடு
(ஆ) காசோலைகள், காசுக்கட்டளைகள் பதிவேடு
(இ) கணக்காய்வு ஐயவினாப்பதிவேடு